ந.க.எண்:40272/நி2/4/2019

GOVT. INSTITUTE OF REHABILITATION MEDICINE
844
28 — MAY 2020
K.K. Nagar, Chennai-600 083.

மருத்துவக்கல்வி இயககம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
நாள்:20.03.2020.

பொருள் : நிர்வாகம் - திரு.G.யுவராஜ் த/பெ.(லேட்)திரு.R.கோபி, அரசு புனர் வாழ்வு மருத்துவ நிலையம், கே.கே. நகர், சென்னை - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து - ஆணை வெளியிடப்பட்டது - சார்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை :
1. தங்கள் அலுவலக கடித ந.க.எண்:1473/நி1/2017, நாள்:16.05.2019 மற்றும் 04.10.2019.
2. அரசாணை (2ப) எண்:49, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை, நாள்:12.03.2020.

*******

திரு.G.யுவராஜ், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அரசு புனர் வாழ்வு மருத்துவ நிலையம், கே.கே. நகர், சென்னை அவர்களின் பணியினை வரன்முறை செய்து பார்வை 2-ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணை இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தனியருக்கு உரிய முறையில் சார்பு செய்து பணிப்பதிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சென்னை, கே.கே. நகர், அரசு புனர் வாழ்வு மருத்துவ நிலைய இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : மேலே கண்டவாறு.

ப.சரத்பாபு
அரசு இணை செயலாளர்/
இணை மருத்துவக்கல்வி இயக்குநர் (நிர்வாகம்)

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

அலுவலக கண்காணிப்பாளர்.

பெறுநர் :

1. திரு.G.யுவராஜ், இளநிலை உதவியாளர். (உரிய வழியாக)

2. இயக்குநர்,
அரசு புணர்வாழ்வு மருத்துவநிலையம்,
கே.கே.நகர், சென்னை-600 083.

3. மாநில கணக்காயர், சென்னை-18.

020375

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.G.யுவராஜ் (த/பெ. (லேட்) R.கோபி) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

அரசாணை (2டி) எண்.49

நாள்: 12.03.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி, மாசி – 29

படிக்க :-

மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்
16 MAR 2020
சென்னை-101.
கீழ்ப்பாக்கம்

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.40727/நி2/4/2019, நாள். 05.11.2019.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) கடிதத்தில், சென்னை, அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலையத்தில் மருத்துவமனை பணியாளராகப் (Hospital Worker) பணியாற்றிக் கொண்டிருந்தபோது R.கோபி என்பவர் 03.11.2003ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 21.01.1954 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.01.2014 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 29.12.2003 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 14.02.1984 என்றும், திரு.G.யுவராஜ் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராகப் 19.06.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 19.06.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவக் கல்வி இயக்குநர் (பொ) அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.G.யுவராஜ், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 19.06.2017 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.23480/க்யூ1/2019–1, நாள் 26.02.2020 மற்றும் அ.சா.எண்.7589/ஜி2/2020, நாள் 03.03.2020–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–600 010.
திரு.G.யுவராஜ், இளநிலை உதவியாளர் (உரிய வழியாக) Received [signature] 20/04/2020
மாநில கணக்காயர், சென்னை – 600 018.

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 16/03/2020
பிரிவு அலுவலர்
[initials] 16/3/20